எனது ஊர்

காரைநகர்

வெளியீட்டு அனுசரணை:

Mr. V.Vijayaratnam M.D

WWW.KARAINEWS.COM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட...

graphicland

Perfection in Desigining is our Priority

416 412 0900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6வது ஆண்டில் உங்கள் கைகளில் தவளும் "எனது ஊர் காரைநகர்"

'2007ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதலாவது இதழ் றிச்மன்ட் ஹில் இந்து ஆலயத்தில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த ஐந்து வருடங்களாக 13 இதழ்கள் வெளியாகியுள்ளன. தனிப்பட்ட வகையில் ஒரு சில ஆதரவாளர்களின் தளராத முயற்சியினால் "எனது ஊர் காரைநகர்" தடைகள் இன்றி கடந்த நான்கு வருடங்களை கடந்து வந்திருக்கின்றது. ஒவ்வொரு இதழ்களும் முற்றிலும் இலவசமாக அஞ்சல் மூலம் கனடாவில் 500க்கும் மேற்பட்ட காரைநகர் மக்களை சென்றடைந்து வருகின்றது. மேலும் 500 பிரதிகள் நேரடியாகவும் விநியோகிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது இலங்கையிலும் காரைநகரிலும், வெளிநாடுகளிலும் குறிப்பிடத்தக்க பிரதிகள் கிடைக்கப்பெற்று வருகின்றது. இவற்றிற்கெல்லாம் காரணம் நாம் கொண்ட ஊர்ப்பற்றும், எமக்கு ஆதரவு செய்துவரும் அனுசர ணையாளர்கள் கொண்ட ஊர்ப்பற்றுமே. காரைநகர் செய்திகளை கேட்டு அறிந்து கொள்ள முடியாதவர்களிற்கும், காரைநகர் பற்றிய தேடல்கள் இல்லாமல் இடம்பெயர்ந்த நாடுகளில் தங்கள் ஊர் அடையாளங்களை இழந்து கொண்டிருக்கும் நம்மவர்களிற்கு இஷ்டப்பட்டாலே அன்றி இஷ்டம் இன்றியோ அவர்களிற்கு எமது மண்ணின் செய்திகளை தெரிவிப்பதில் நாம் பெரும் சிரத்தை எடுத்து வருகின்றோம்.

ஊர்ச்சேவை என்ற பெயரில் பொதுப்பணி செய்து வரும் அமைப்புக்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களிற்கு உட்பட்டு தமக்கு விரும்பியவர்களை அனுசரித்தும், விரும்பாதவர்களை வெளியேற்றியும் நடாத்தி வருகின்ற தெருக்கூத்துக்களுக்கு மத்தியில் அனைவரையும் அனுசரித்து எமக்கெல்லாம் பொதுவான காரை மண்ணை முன்னிறுத்தி நாம் செய்து வரும் சேவையானது தடைகள் இன்றி இன்னும் பல வருடங்கள் தொடரும் என்பதில் நம்பிக்கை தருகின்றது. காரை மண்ணின் அபிவிருத்தி விரும்புபவர்கள், அறிவுஜீவிகள், கல்விமான்கள் எம்மைத்தொடர்பு கொண்டு எமக்கு அளித்துவரும் நம்பிக்கை வார்த்தைகள் எங்கள் பணிக்கு உந்து சக்தியாக விளங்குகின்றன.

ஒவ்வொரு இதழ் வெளிவருவதற்கும் 3000 டொலர்கள் செலவு ஆகின்றது. அவற்றின் ஒரு பகுதியை அனுசரணையாளர்கள் விளம்பர நோக்கத்திற்காக அன்றி ஊர் முன்னேற்றம் கருதி வளங்கி வருகின்றார்கள். கடந்த 13 இதழ்கள்களினை அச்சடித்த நிறுவனமான Graphic Land அச்சகத்தினர் எமது ஊர் பணியினை நன்கு அறிந்து மிகக்குறைந்த விலையில் தரமான வடிவமைப்புடன் "எனது ஊர் காரைநகர்" வெளிவர உதவி வருகின்றார்கள். பார்த்தவுடன் பக்கம் தவறாமல் படிக்க தூண்டும் ஆவலுடன் "எனது ஊர் காரைநகர்" 6வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

தொகுப்பாளர்
"எனது ஊர் காரைநகர்"
தீசன் திரவியநாதன்

331 Trudelle Street
Unit 34
Scarborough, Ont.
M1J 3J9
Canada
Tel: 416 821 8390

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை

ஒற்றுமை ஒற்றுமை என நாம் எல்லோரும் பேசுவது எதனை? கருதுவது என்ன?
கணவன் மனைவி பெற்றோர் பிள்ளைகள் கொண்ட ஒரு குடும்பம் ஒற்றுமையாக வாழ்கிறார்கள் என்றால் என்ன கருதுகிறோம். கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டபோதும் சுமூகமான தீர்வை ஏற்று ஒற்றுமையாக வாழ்கிறார்கள் எனலாம். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையாக இருக்க தொடர்புகள் பேணப்பட வேண்டும். அதாவது இடையிடையே நிகழ்வுகளுக்கு அழைக்க வேண்டும் அவர்களும் பங்குபற்றி சிறப்பிக்க வேண்டும்

அண்ணன் தம்பி தங்கை மாமா மாமி ..... போன்ற நெருங்கிய உறவுகள் தனித் தனியாக வாழ்ந்த போதும் மிகவும் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதால் கருதுவது என்ன? எமது ஒற்றுமையை மற்றவர்கள் எப்படி அறிகிறார்கள். ஒரு வைபவம் நிகழும் போது ஒருவர் தவறாது எல்லோரும் சமூகம் அளித்து அதில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் போது அந்த குடும்பம் ஒற்றுமையாக உள்ளது எனலாம். குடும்பத்தில் ஒருவரை ஒருவர் குறை கூறாது பழி சுமத்தாது இன்பமாக வாழ்ந்தார்களாயின் குடும்பம் ஒற்றுமையாக உள்ளது எனலாம்.

ஒரே வீட்டில் வளர்ந்த பிள்ளைகள் தனி குடித்தனம் செல்வது அவர்களின் வளர்ச்சிக்கு தேவையானதாகும். இதனை நாம் பிரிவு என கூறுவதில்லை. அவர்கள் குடும்பத்தில் ஒரு நிகழ்வு வரும் போது ஒன்று கூடுகிறார்கள். ஒரே கடையில் இரு பங்காளிகளாக சேர்ந்து வியாபாரம் செய்யும் இருவர் நன்கு வியாபாரத்தில் வளர்ந்ததும் தனித்தனியாக வியாபாரம் செய்வதைக் கூட பிரிவு என பார்க்கக்கூடாது. வளர்ச்சிக்கு தேவையானதாகும்.

Face Book இல் நான் இந்த பாடசாலையில் படித்தவர் என அறிவிக்கும் போது அல்லது ஒருவர் நான் படித்த பாடசாலையில் படித்தவர் என அறியும் போது ஏதோ ஒரு பாச உணர்வு ஏற்படுவதை அவதானித்து இருப்பீர்கள். பாடசாலை ஒன்று கூடல் அல்லது ஒரு வைபவம் நடைபெறும் போது போக நேரம் இல்லாது விட்டாலும் பங்குபற்ற வேண்டுமே உள்ளுணர்வு எமது மனதில் ஏற்படுவதை அனுபவித்திருப்பீர்கள்.

ஏல்லோருக்கும் எல்லா நிகழ்வுகளும் ஆனந்தத்தை கொடுக்காது. ஒரு சிலர் கோவில் வைபவத்தின் போது மட்டும் பங்கு பற்றியும் சிலர் ஒன்றுகூடலில் பங்குபற்றுவதன் மூலமும் தொடர்புகளை பேணுகிறார்கள். மேலும் வித்தியாசமான வைபவங்களை (பழைய மாணவர் ஒன்று கூடல்) அறிமுகம் செய்யும் போது பலரும் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்கலாம்.

போட்டி பிரிவினையை ஏற்படுத்தாது. போட்டி திறைமைகளை வெளிக் கொண்டுவரும். பொறாமை பிரிவினையை உண்டு பண்ணும். எனவே பொறாமை வராமல் கவனித்தால் பிரிவினை ஏற்படாது.

ஏன் மக்கள் பொதுஅமைப்புக்களில் சேராமல் இருக்கிறார்கள்?

" பங்கு பற்ற விருப்பம் உண்டு ஆனால் நேரம் இல்லை. இப்படியான வைபவம் பிடிக்கவே பிடிக்காது. அங்கு கூறப்படும் கருத்துக்கள் என்னால் ஏற்க முடியாது உள்ளது. எனது மனதை புண்படுத்துகிறது. வரும் மக்கள் நடந்துகொள்ளும் முறை என்னை பாதிக்கிறது. எனவே தவிர்த்துக்கொள்ள விரும்புகிறேன். நான் எத்தனையோ செய்தேன் ஒருவரும் அதனை கண்டு கொள்கிறார்கள் இல்லை. உங்கு செல்வதால் வீண் செலவுகளும் தேவை இல்லாத மனஸ்தாபங்கள் ஏற்படலாம் "

இப்படி பல கருத்துக்களை முன் வைக்கலாம். ஆனால் உள்மனதில் உள்ள உண்மையான காரணங்கள் பெரும்பாலும் வெளி வருவதில்லை. நாகரீகம் கருதி சொல்வதும் இல்லை. ஒற்றுமை என்பது அடிப்படை நோக்கத்தில் தங்கியுள்ளது. பல அமைப்புக்கள் இருந்தாலும் எமது அடிப்படை நோக்கம் ஒன்றாக இருந்தால் அதுவே ஒற்றுமையாகும்.

-காரை அமிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகரில் 8மில்லியன் ரூபா செலவில் கலாச்சார மையம் அமைக்க ஏற்பாடு

09.12.2011 அன்று வலந்தலை சந்திக்கு அண்மையில் புதிதாக கட்டப்பட்டு வரும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் முன்பாக கலாச்சார மண்டபத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது.

இதற்குரிய நிலத்தினை காரைநகர் அபிவிருத்தி சபை தனியாரிடம் இருந்து 4 இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்து மேற்படி தேவைகளிற்காக அன்பளிப்பு செய்திருந்தது. யாழ் மாவட்டத்தில் அமையவுள்ள இரண்டு கலாச்சார மையங்களில் ஒன்று காரைநகரில் அமையவுள்ளது காரைநகர் மக்களிற்கும் மண்ணிற்கும் பெருமை சேர்க்கவல்லது. கலாச்சார மையம் அமைப்பதற்கு அனைத்து வழிகளிலும் காரைநகர் அபிவிருத்தி சபை முன்னின்று பணியாற்றியதோடு அதற்குரிய காணியினை கொள்வனவு செய்து உரிய நேரத்தில் வளங்கியது இச்செயற்பாட்டிற்கு பெரும் உறுதுணையாக இருந்ததுடன் காரைநகரில் கலாச்சார மையம் அமைவதற்கும் காரணமாக இருந்துள்ளது.

தங்கோடை கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு கணணி வழங்கப்பட்டது

விஜயகலா மகேஸ்வரன் எம்பியின் உதவியுடன் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவு நிதி ஒதுக்கீட்டின் கீழ் கணணி வழங்கப்பட்டது. டிசம்பர் மாதம் 23ம் திகதி மேற்படி கணணியினை தங்கோடை கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பொ.பரந்தாமனிடம் காரை உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் கையளித்தார், அவருடன் பிரதேச சபை வெளிகள உத்தியோகத்தர் எஸ்.கஜன் உடனிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் கடற்படையினரால் புனரமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது

வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் கடற்படையினரால் சிரமதான முறைப்படியும், கொழும்பு VOC Jewelerry வழங்கிய 6 இலட்சம் ரூபாய்கள் அன்பளிப்பினாலும் மறு சீரமைக்கப்பட்டு அனைத்து வசதிகளும் கொண்டதாக டிசம்பர் 17, 2011 அன்று அதிபர் *S.*இளங்கோவிடம் கையளிக்கப் பட்டது. வடபிராந்தியக் கட்டளைத தளபதி அட்மிரல் ஆர்.சி. விஜய குணவர்தனா, காரைநகர் கடற்படை தளபதி டி.எஸ்.சில்வா மற்றும் கடற்படை உயரதிகாரிகள் கலந்து கொண்டு கையளித்து வைத்தார்.

மலசலகூடம், சிறுவர் பூங்கா, வகுப்பறைகள், அதிபர் ஆசிரியர் அலுவலகங்கள், மின்னிணைப்பு, குடிநீர்த் தாங்கி, சுற்றிவர இறுக்கமான வேலிகள் என அடிப்படை வசதிகள் அனைத்தும் ஒழுங்கே அமையப்பெற்ற நவீன பாடசாலையாக ஸ்ரீ கணேசா வித்தியாலயம் புனரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்நிகழ்வில் பாடசாலையில் கல்வி பயிலும் 40 மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் பாடசாலை உபகரணங்களும் கடற்படை அதிகாரிகளினால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் கடற்படையினரின் சிரமதானப்

பணியினை மெய்ச்சியதாகவும். செய்திகள் தெரிவிக்கின்றன

PARCIC நிறுவனத்தினூடாக உதவிகள் வழங்கப்பட்டன

23.11.2011இல் அம்பாள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற உதவிகளை கையளித்தல் நிகழ்வில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த 12 பேர்களிற்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. மீன்பிடி வள்ளங்கள், வலைகள், தையல் இயந்திரம் என்பன வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் காரை உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் மற்றும்

காரைநகர் பிரதேச சபை உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி காரைநகர் அமைப்பாளர் திரு.கண்ணன் மற்றும் காரைநகர் மத்தி கிராம சேவையாளர் சுமந்திரன், காரை வடகிழக்கு கிராம சேவையாளர் இ.திருப்புகழூர்சிங்கம், கடற்தொழில் பரிசோதகர் செல்வி தி.தயாளினி, மீன்பிடி யாழ்மாவட்ட உதவிப்பணிப்பாளர் இ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"நெல்சிப்" திட்டத்தின் கீழ் இரண்டு வீதிகள் புனரமைப்பு:

மேற்படி திட்டத்தின் கீழ் புதுறோட்டு – சிவன்கோயில் வீதி இருவழிப்பாதையாக அகலிக்கப்படவுள்ளதுடன், பழைய கண்டி – சிவன் கோயில் வீதியும் அகலிக்கப்பட்டு புனரமைக்கப்படவுள்ளது. இந்த இரண்டு வீதிகளும் 2012இல் புரனமைக்கும் பணிகள் ஆரம்பமாகும் எனவும், இதன் மூலம் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் எனவும் காரைநகர் பிரதேச சபை தலைவர் வே.ஆனைமுகன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து சிதம்பரம் மணிவாசகர் மடாலயத்திற்கு புதிய நிர்வாக சபை:

வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபை தெரிவும் 23.10.2011 அன்று நடைபெற்றது. கடந்த வருட வரவு செலவு அறிக்கையும் செயலாளர் அறிக்கையும் வாசிக்கப்பட்டது. கலந்து கொண்டவர்களினால் மேற்படி அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து அடுத்த வருடத்திற்கான நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது. நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவில் ஆயுட்கால தலைவராக திரு. ஈ.எஸ்.பி. நாகரட்னம் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக திரு.க.சோமசேகரம், செயலாளராக திரு.நா.பாலகிருஸ்ணன், உபசெயலாளராக திரு.க.பிரதீபன், பொருளாளராக திரு.ச.இராசநாயகம் ஆகியோருடன் 23 நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

காரைநகரில் இலங்கை தமிழரசுக் கட்சி கிளை அங்குரார்ப்பணம்:

10.11.2011 இல் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வு இலங்கை தமிழரசுக் கட்சி சிரேஸ்ட உபதலைவர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நிர்வாக செயலாளர் எஸ்.குலநாயகம், மாவட்ட தலைமை செயலாளர் பொ.கனகசபாபதி, மானிப்பாய் தொகுதி உபதலைவர் எஸ்.கஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைநகர் கிளை தலைவராக மு.கந்தசாமி அவர்களும், செயலாளராக த.முரளி ரூபன் அவர்களும், பொருளாளராக கா.தவராசா அவர்களும், உபதலைவராக க.ஆறுமுகம் அவர்களும், உபசெயலாளராக ச.சண்முகராசா அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் 15 அங்கத்தவர்களும் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

காரைநகர் பாடசாலை அதிபர்கள் உத்தியோக பூர்வமற்ற முறையில் தமது பாடசாலைகளை பராமரித்து வருகின்றார்கள்:

குற்றச்சாட்டு

கனடா காரை கலாச்சார மன்றத்தின் இணையத் தளத்தில் காரைநகர் பாடசாலைகளின் அதிபர்கள் விடுத்த வேண்டுகோள்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. காரைநகர் பாடசாலைகளின் தேவைகளை காரைநகர் கோட்டக்கல்லூரி அதிகாரிகளிற்கும் கல்வித் திணைக்களத்திற்கும் தெரிவிக்காமல் தனிப்பட்ட வகையில் உத்தியோகபூர்வமற்ற வகையில் பாடசாலையின் தேவைகளை குறிப்பிட்டு பல உதவிகளை கோரியிருக்கின்றார்கள்.

காரைநகர் பாடசாலைகளில் சிற்சிறிய தேவை களையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றக்கூடிய வகையில் பழைய மாணவர் அமைப்புக்கள் இருக்கின்றபோதிலும் அதிபர்கள் அவற்றினை முறையே நெறிப்படுத்த முடியாதவகையில் உத்தியோகபூர்வமற்ற முறையில் வெளிநாடுகளில் உள்ள அமைப்புக்களிடமும் தனிப்பட்டவர்களிடமும் இருந்து பெறும் உதவிகளை தன்னிச்சையாக செயற்படுத்தி வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு மத்தியில் கனடா காரை கலாச்சார மன்றத்தின் இணையத்தளத்தில் எடுத்து வரப்பட்ட அதிபர்களின் கோரிக்கைகள் உடனடியாக நீக்கப்பட்டிருக்கின்றன. யாழ்ற்ரன் கல்லூரி அதிபரின் வேண்டுகோள்கள் தவிர்ந்த மற்றை பாடசாலைகளின் தனிப்பட்ட கடிதங்கள் இணையத்தளங்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

காரைநகர் கோட்டக்கல்வி திணைக்களத்தினூடா கவும், வடமாகாண கல்வி திணைக்களத்தினூடா கவும் முதற்கண் பாடசாலைகளிற்கு தேவையான அடிப்படை தேவைகளை பெற்றுக் கொள்ள பாடசாலை நிர்வாகங்கள் செயற்பட வேண்டும். கல்விச்சபையினால் நிராகரிக்கப்பட்ட செயற் திட்டங்களின் தேவைகளை பழைய மாணவர் அமைப்புக்கள் பரிசீலனை செய்து அவற்றினை நிறைவேற்ற வெளிநாடுகளில் உள்ள காரைநகர் அமைப்புக்களை நாடவேண்டும் எனவும் தன் னிச்சையாக அதிபர்கள் நேரடியாக வெளிநாட்டு அமைப்புக்களை அணுகி வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு இடம்பெயர்ந்த காரைநகர் மக்களிடத்தில் பரவலாக குற்றச்சாட்டப்பட்டு வருகின்றது. காரைநகர் பாடாசலை அதிபர்கள் இவற்றினை கருத்திற் கொண்டு செயற்படுவார்கள் என “எனது ஊர் காரைநகர்“ எதிர்பார்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா காரை கலாச்சார மன்றம் நடாத்திய “தெருக்கூத்து” பலர் விசனம்

கனடா காரை கலாச்சார மன்றத்தின் ரவி ரவீந்திரன் தலைமையிலான நிர்வாக சபை தன்னிச்சையாகவும் நிர்வாகத்திற்கு இஷ்டப்பட்டவர்களினாலும் எடுத்துக்கொண்ட முடிவினாலும் கிறிஸ்மஸ் தினத்தன்று தனியார் உணவுவிடுதியொன்றில் களியாட்டங்களை நடாத்தியிருக்கின்றார்கள்.

இந்த கொண்டாட்டத்தில் கனடா காரை கலாச்சா மன்றத்தின் வளர்ச்சிக்கும் காரை மண்ணின் செயற்பாடுகளிலும் அக்கறை அற்ற சிலர் கலந்து கொண்டிருக்கின்றார்கள். ஈழத்து சிதம்பரம் திருத்தொண்டர் சபையாக ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றம் இதுபோன்ற காரைநகர் கலாச்சாரத்தை சீரழிக்கும் வகையில் மதுபானம் வழங்கி சிறுவர்கள், ஆண்கள், பெண்கள் என எல்லோரையும் மேற்கத்தைய கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இம்மன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதை கண்டித்திருக்கின்றார்கள். அது மட்டுமன்றி ரவி ரவீந்திரனின் இந்த கொண்டாட்டத்தில் முன்னைநாள் இம்மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்கள், போஷகர்கள், அனுசரணையாளர்கள் என எவருமே கலந்து கொள்ளாது புறக்கணித்துள்ளனர். கனடா காரை கலாச்சர மன்றத்தின் நற்பெயரை மட்டும் பயன்படுத்தி அதன் தற்போதைய நிர்வாக சபையினரின் இச்செயல் உத்தியோகபூர்வ நிகழ்வாக அமையவில்லை என்பதுடன் இந்நிகழ்வை நடாத்த உதவிய தனியார் உணவு விடுதி உரிமையாளர் இது தனியார் நிகழ்வு என்றும் வழங்கப்பட்ட பணம் மன்றத்தின் காசோலையாக அன்றி பணமாக தலைவர் ரவி ரவீந்திரனால் வழங்கப்பட்டது என்றும் முழுமையான செலவீனங்களை அவரே பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த மூன்று வருடங்களாக நத்தார் கொண்டாட்டங்களை நடாத்துவதற்கு இந்த மன்றம் முனைந்துள்ள போதிலும் பலவித காரணங்களினாலும் விமர்சனங்களினாலும் தவிர்க்கப்பட்டு வந்துள்ளது. வீடு விற்பனை முகவராக ரொறன்ரோவில் பகுதி நேரமாக பதவி வகிக்கும் ரவி ரவீந்திரன் அவர்கள் தனது சுயநல நோக்கில் தனது வாடிக்கையாளர்களிற்கு மதுபானம் வழங்கி மேற்கத்தைய பாணியில் குஷிப்படுத்த கனடா காரை கலாச்சார மன்றத்தையும் அதன் தலைமை பதவியையும் பயன்படுத்தியுள்ளார் என்பதனை “எனது ஊர் காரைநகர்“ வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் இங்கே பதிவு செய்கின்றது. 50க்கும் மேற்பட்ட சிறார்கள் சூழவிருக்க 50க்கும் மேற்பட்ட மதுபான பிரியர்கள் மதுபானம் அருந்தி மேற்கத்தைய கலாச்சாரத்தை வெளிப்படுத்த அதனை படம் எடுத்து கனடா காரை கலாச்சார மன்றத்தின் இணையத்தளத்தில் பிரசுரித்தது மிகவும் தரக்குறைவான கலாச்சார செயல் என இந்த மன்றத்தின் நிர்வாகத்தினர் புரிந்து கொள்ள வேண்டும்.

கனடா-காரை கலாச்சார மன்றத்தின் முன்னாள் தலைவரும் சிறந்த சமூக சேவகருமான திரு.அருணாசலம் கருணாகரன் அவர்கள் கனடாவில் 30.12.2011 அன்று காலமானர்.

அன்னார் காரை மண்ணின் மீது மதிப்பும் மரியாதையும் நிறையவே கொண்டு கனடா காரை கலாச்சார மன்றத்தில் பலகாலம் நற்பணி செய்வதிலும், கனடாவில் மற்றைய சமூகஅமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்ட கல்விமான் ஆவார்.

அப்புத்துரை பள்ளிக்கூட முன்னாள் அதிபர் திரு.அ.கமலாகரன் அவர்களின் உடன்பிறந்த சகோதரான அமரர் அவர்கள் Zambia, Jamaica போன்ற நாடுகளில் பலகாலம் கடமையாற்றி கனடா வந்த போதிலும் ஊர் பற்றுமாறாத சிந்தனையாளர். எதிலும் நிதானமாக செயற்படும் சுபாவம் கொண்டவர். அன்னார் கனடா காரை கலாச்சார மன்றத்தில் தலைவராக கடமையாற்றிய காலத்தில் இவ்விணையத்தளத்தின் தொகுப்பாளராகிய நான் அவரது நிர்வாக சபையிலே பங்குகொண்டிருந்தேன், என்பதுடன் நிதானம், பொறுமை என்பவற்றை கற்றுத்தந்த ஆசான் ஆவார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர நடராசனை துதிக்கிறோம்.

காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம், பெற்றோர்களின் ஆதரவு இல்லை!

01.01.2012 அன்று காரைநகர் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பழைய மாணவர் சங்க பொதுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தில் 34 பேர்கள் மாத்திரம் கலந்து கொண்டார்கள். இதில் 12 பேர்கள் வெளிநாடுகளில் இருந்து சென்றவர்கள். இன்று காரைநகர் இந்துக் கல்லூரியில் 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்களின் அடிப்படை தேவைகளை கல்விச் சபையினால் பூர்த்தி செய்ய முடியவில்லை. அதிபரினால் பலவிதமான தேவைகளை இனம் காண முடிந்த போதிலும் அவற்றிற்கான உதவிகளை பெற உத்தியோக பூர்வமாக உதவிகளை பெறமுடியாத நிலை, இந்த நிலையில் பழைய மாணவர் சங்கத்தினால் மட்டுமே அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் என்கின்ற நிலையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு காரைநகர் மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை.

கணணி பிரிவிற்கு ஆசிரியர் இல்லை, கக்கூஸ் கழுவ முடியாத நிலை, சுகாதாரம் அற்ற நிலையில் மலசல கூடம், பாடசாலை ரெலிபோன் பில் கட்ட முடியாத நிலமை, நடராஜா மண்டபம் இடிந்து விழும் நிலமை, விளையாட்டு மைதானம் கவனிப்பாரற்ற நிலமை இவ்வாறு எல்லாம் பலவித இன்னோரன்ன அடிப்படை தேவைகள் இருக்கின்ற போதிலும், அவற்றினை கண்டு கொள்ளப்போவது யார்? 700 பிள்ளைகளிற்கு மேற்பட்டவர்கள் கல்வி கற்றும் பாடசாலையில் காரைநகரில் இருந்து பழைய மாணவர் சங்க கூட்டத்தில் 12பேர்கள் மட்டுமே பங்குபற்றியுள்ளார்கள். கவனிக்க வேண்டும் இடம் பெயர்ந்து வாழும் காரைநகர் மக்களே! அதிபரில் பிழையா, அல்லது நிர்வாகத்தில் பிழையா, அல்லது தற்போது இப்பாடசாலையில் கல்விகற்றும் 700 பிள்ளைகளின் பெற்றோர்களில் பிழையா அல்லது இடம்பெயர்ந்து வாழும் எங்களின் பிழையா? காரைநகரில் வாழும் மக்களிற்கு இது ஒரு பிழை என்பதே தெரிய வாய்ப்பு இல்லை, நடைபெற்ற 34 பேர்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் வழமைபோல காரை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்கு தலைவராக தற்போதைய அதிபர் பொன் சிவானந்தராஜா அவர்களும். புதிய செயலாளராக திரு. இ. திருப்புகழூர்சிங்கம் அவர்களும், பொருளாளராக திரு. பாலசிங்கம் இராமகிருஷ்ணன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இன்றைய பொதுக்கூட்டத்தில் கலாநிதி ஆ.தியாகராஜா அவர்களின் மகள் கலந்து கொண்டு இப்பாடசாலையின் பெயரினை முன்புபோல காரைநகர் இந்துக் கல்லூரி என மாற்ற வேண்டும் என்றும் தனது தந்தையார் வாழும் போதே எந்தவிதமான பலாபலன்களையும் எதிர்பாராமல் வாழ்ந்தவர் என்றும், இப்பாடசாலையின் பெயரினை முன்புபோலவே காரைநகர் இந்துக் கல்லூரி என மாற்றுவதையே அவரது ஆத்மாவும் விரும்பும் எனவும் உணர்ச்சிபூர்வமாக கேட்டுக் கொண்டார்.

காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சபையின் புதிய நிர்வாகத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களிற்கு விழிப்புணர்வை முதற்கண் உண்டாக்க வேண்டும். அவர்களது பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலையில் இருக்க வேண்டிய அடிப்படை தேவைகளை பற்றிய அறிவும் தேடலும் அவர்களிற்கு இருக்க வேண்டும் என்பதனை உணர்த்த வேண்டும். இன்று கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களிற்கு பாடசாலையின் நிலைமை விளங்கவில்லையாயின் எப்போதோ கல்வி கற்று படசாலையைவிட்டு விலகிக எங்களால் எதுவுமே செய்ய முடியாது. என்பதனை உணர்த்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

700 மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க கூட்டத்திற்கு எப்போது 300பேர் பங்கு பற்றுகின்றார்களோ அன்றுதான் வெளிநாடுகளில் ஊரைவிட்டு காணாமல் போன வெளிநாட்டு வாசிகளிடம் உதவிகளை கோரமுடியும் என்பதனை இந்த நிர்வாகசபை உணர்ந்து கொள்ள வேண்டும்.

'எனது ஊர் காரைநகர்" இணையத்தளத்தின் சார்பாகவும், இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர் என்கின்ற உரிமையுடனும் தற்போது தெரிவாகியுள்ள பழைய மாணவர் சங்க நிர்வாக சபையினரிடம் கேட்டுககொள்வது யாதெனில். இன்னுமொரு பொதுக்கூட்டத்திற்கு ஆவண செய்யுங்கள், 300க்கும் மேற்பட்ட பெற்றோர்களை வரவழையுங்கள், உண்மைகளை வெளிக்கொண்டு வாருங்கள். அது வரை 5க்கும் 10க்கும் வெளிநாடுகளில் உள்ள அமைப்புக்களிடம் பிச்சையெடுக்காதீர்கள். காரைநகரில் வடக்கும், தெற்கும் இணைந்து கொள்ள ஆரம்ப காலம் முதல் அத்திவாரமாக இருந்ததும் இந்த பாடசாலையே. விளையாட்டு மைதானம் இடிந்து விழுந்தது போல் நடராஜா மண்டபமும் இடிந்து விழும் செய்தியை நாம் யாரும் எதிர்பார்க்கவில்லை. அதிபரும், நிர்வாகசபையும் சேர்ந்து உங்கள் திறமைகளை வெளிக்கொண்டுவர நீங்கள் கோரும் உதவிகள் உண்மையில் பிச்சையே. கனடா காரை கலாச்சார மன்றத்தில் இன்று நிர்வாகசபயையில் பதவியேற்றிருக கும் ரவி ரவீந்திரன், சங்கரப்பிள்ளை தவராஜா போன்ற பொதுப்பணி செய்ய புறப்பட்டவர்களிற்கு ஐந்தும் பத்தும் அல்ல பத்து பதினைந்து இலட்சங்களையே கொடுக்கவல்லவர்கள்என்பதனை உணர்ந்து கொண்டு எங்கள் பாடசாலையினை முன்னேற்றுங்கள்.

5ம் தர புலமைப்பரீட்சையில் 193 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றார் காரைநகர் மாணவி சர்மிளா சர்வானந்தன்

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகக் கொண்ட தில்லையம்பலம் சர்வானந்தன் அவர்களின் மகள் சர்மிளா வவுனியா இறம்பைக்குளம் தேசிய மகளிர் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார். வவனியா மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார். அத்துடன் தேசிய மட்டத்தில் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தினையும் பெற்றுள்ளார்.

காரைநகர் இந்துக் கல்லூரியில் சரஸ்வதி சிலை நிர்மானிக்கப்பட்டுள்ளது

காரைநகர் இந்துக் கல்லூரியில் ஒக்டோபர் 5, 2011 அன்று சரஸ்வதி பூசை தினத்தன்று திறந்து சரஸ்வதி சிலை திறந்து வைக்கப்பட்டது. வித்யாபீடத்திளை அமைக்க உதவியவிய சபாபதி சதாசிவம் அவர்கள் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

வலந்தலை மடத்துக்கரை அம்மன் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றது

மருதடி பிள்ளையார் கோயில் கேணி புனரமைக்கப்பட்டது

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினரால் சமுர்த்தி திட்டத்தின் கீழ் இக்கேணி புனரமைக்கப்பட்டுள்ளது ஒக்டோபர் 2011 இல் இப்புனரமைப்பு பணி நிறைவு பெற்றது. இக்கேணியை சுற்றி பொதுமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனைக்குரிய வீதி இருப்பதால் பொது மக்களின் பாதுகாப்பு கருதி இக்கேணியின் சுவர் திருத்தப் பட்டுள்ளது. இக்கேணி தூர் வாரப்பட்டு ஆழப்படுத் தப்பட்டால் இப்பகுதியில் உள்ள கிணறுகளில் கோடை காலத்திலும் வற்றாத நீரினை பெற்றுக்கொள்ள முடியும். சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா? முன்வரவேண்டும்.

வெற்றிநாதன் அரங்கு ஜனவரி 15, 2012 தைப்பொங்கல் தினத்தன்று திறப்புவிழா செய்யப்பட்டது.

அமரர் ஐயம்பிள்ளை வெற்றிநாதன் 12.08.1952ம் ஆண்டு காரைநகரில் பிறந்து முதலாவது பொறியியல் பட்டதாரியாக காரைநகரிற்கு பெருமை சேர்த்தவர். இவர் பொறியியலாளராக உத்தியோகபூர்வமாக பதவியேற்று ஒரு மாத காலத்தினுள் 15.05.1975ம் ஆண்டு தனது 23வது வயதில் விபத்து ஒன்றில் அகலா மரணத்தை தழுவிக்கொண்டார். அன்னாரது நினைவாக புதுறோட்டு வாழ் இளைஞர்கள் இம்மண்டபத்தினை கட்டுவித்து வழங்கியுள்ளார்கள்.

காரைநகரில் கல்விப் பணி ஆற்றிய அமரர் நாகபூசணிஅம்மை தியாகராஜா

25 வருடங்களிற்கு மேலாக காரைநகர் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய 1960களில் காரை இந்துக் கல்லூரியில் நியமனம் பெற்ற நாள் முதல் 1989ல் காரை இந்துக் கல்லூரியில் இருந்து ஓய்வு பெறும் வரை ஆசிரியப் பணியை ஏற்ற இறக்கம் இன்றி சீரான முறையில் ஆற்றியவர். என்றுமே தன்

கடமையில் தவறியதில்லை. நிறைவான கல்வியை வழங்குவதன் மூலம் உயர்வான சமூகம் ஒன்றினை காண விளைந்தவர். மாணவர்கள் நல்வாழ்வு பெறும் நோக்குடன் கல்வியை சீரிய முறையில் வழங்குவதில் உளமார்ந்த அக்கறையுடன் செயற்பட்டவர். அமரர் நாகபூசணி அம்மை மூளாய் கிராமத்தை வதிவிடமாக கொண்டிருந்த பொழுதிலும் காரைநகர் இந்துக் கல்லூரியில் ஆற்றிய பயனுறு கல்விப்பணி காரணமாக காரைநகர் கிராம மாணவர்களின் மனங்களைக் கவர்ந்தவர். பெற்றோர்களின் நன்மதிப்பை பெற்றவர். தனக்கென முத்திரை பதித்தவர். 2011ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சுகயீனம் காரணமாக இயற்கை எய்தினார். அன்னாரது ஆத்மா தில்லைக் கூத்தனின் திருப்பாதங்களை சென்றடைய பிரார்த்திப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் பாலாவோடை இந்து தமிழ்கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம் தோற்றமும் செயற்பாடும்:

ஒரு சமூகம் அல்லது இனம் அபிவிருத்தியடைய வேண்டுமானால் அதற்கு இரண்டு அடிப்படைக் காரணிகாள இருப்பவை கல்வியும்,பொருளாதாரமும் ஆகும். அந்தவகையில் இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் காரைநகர் மக்களுக்கு கல்வியும் பொருளாதாரமும் சமமாக எவ்வித தடையுமின்றி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இருந்தாலும் நாம் பிறந்து வளர்ந்த ஊராகிய காரைநகரில் உள்ள மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும், அவர்களது வாழ்க்கையை வளமாக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்துடன் செயற்பட புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் காரைநகர் மக்கள் ஆர்வமாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆர்வலர்களை எவ்வாறு ஒன்றிணைப்பது, எதை நாங்கள் முதன்மைப்படுத்தி செய்யவேண்டும், எதை நாங்கள் தொலைநோக்குடன் செய்யவேண்டும் என்ற கேள்விகள் நம்முன்னே நிற்கின்றன. அப்படிப் பார்த்தால் முதன்மையாக நமது சமூகத்திற்கு முதலில் தேவைப்படுவது கல்வியே ஆகும். அப்படியாயின் நாம் கல்வி கற்ற பாடசாலைகள் அல்லது கல்லூரிகளுக்கு எவ்வாறு நாம் பங்களிப்பு செய்யலாம், அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பவற்றை நோக்கமாகக் கொண்டு மேற்கூறிய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம் சமூக ஆர்வலரான திரு.சிவா மகேசன் அவர்களின் முயற்சியினால் 22.08.2010 அன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு இப்பாடசாலைகளில் கல்வி கற்ற பழைய மாணவர்களை உள்ளடக்கிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.

மேற்படி பழைய மாணவர் சங்கம் கடந்த 22.08.2010 ஆரம்பித்து ஒரு வருடத்தை நிறைவு செய்ததுடன் இரு பாடசாலைகளுக்கும் எமது நிர்வாகத்தினால் முழுமையாக அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யாவிட்டாலும், எம்மால் இயன்றளவு சில அவசியமானதும், அவசரமானது மான தேவைகளை இனங்கண்டு பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பிருத்தானியாவில் வாழும் இரு பாடசாலைகளின் பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் நிதியுதவியுடன் சில தேவைகளை நிறைவு செய்துள்ளோம். அவற்றுள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவதன் நோக்கம் ஏதோ நாங்கள் பெரிய சேவை செய்துவிட்டோம் அல்லது எம்மை இதனூடாக விளம்பரப்படுத்துவதாகவோ அல்ல. மாறாக இன்னும் அதிகளவு செய்யவேண்டிய தேவையுள்ளதால், நாங்கள் மட்டும்தான் செய்ய வேண்டும், எங்களிடம்தான் திறமையுள்ளது என்ற மனோபாவத்திலிருந்து சற்று விடுபட்டு நாங்கள் எங்கு புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், நாங்கள் வாழும் நாடுகளிலுள்ள பழைய மாணவர் சங்கங்களுடன் இணைந்து நாங்கள் கல்வி கற்ற பாடசாலை அல்லது கல்லூரிகளின் தேவைகளை இனங்கண்டு, எமது ஊரில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள், மற்றும் புத்திஜீவிகள், தொழில்முறை சார்ந்தோர், வர்த்தகர் கள் அனைவரினதும் ஆக்கபூர்வமான கருத்துக் களை உள்வாங்கி, நாம் எல்லோரும் எம்மால் இயன்ற பங்களிப்பிை வழங்குவதற்கு முன்வர வேண்டும். அதுவே நாம் காரைநகர் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு செய்யும் தொண்டாகும்.

"உற்றார் நடாட்வர் ஊரார் - இவர்க்கு
உண்மைகள்கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம் - இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றுமில்லை"

இங்ஙனம்
சு.சரவணபவன்
பழைய மாணவர் சங்க நிர்வாகம் சார்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் காரைநகர் பாடசாலைகளில் கல்வி கற்ற 16 மாணவ, மாணவிகள் சித்தியடைந்துள்ளனர்

5ம் தர புலமை பரிசில் பரீட்சையில் தீவக வலயத்தில் ஊரி அ.மி.த.க பாடசாலை மாணவன் செல்வன் சுதாகரன் **விதுர்சன்** (பிட்டியெல்லை) 181 புள்ளிகளை பெற்று முதலிடம்!

யாழ்ற்ரன் கல்லூரி கனிஷ்ட வித்தியாலயம் 6 மாணவர்கள்

யாழ்ற்ரன் கல்லூரி கனிஷ்ட வித்தியாலயம் 6 மாணவர்கள்

1. சுப்பிரமணியம் புயலிசை (பத்தர் கேணியடி) 178 புள்ளிகள்
2. சிவானந்தன் ரகுராமன் (செம்பாடு) 165 புள்ளிகள்
3. கிருபால் காருண்யன் (விக்காவில்) 155 புள்ளிகள்
4. சக்திதாசன் லக்ஷன் (செம்பாடு) 155 புள்ளிகள்
5. செல்வகுமார் நாகதீபா (ஆலடி) 154 புள்ளிகள்
6. சிவனேஸ்வரன் திலக்ஷி (சின்னாலடி) 153 புள்ளிகள்

தியாகராஜா ம.ம.வித்தியாலயம் கனிஷ்ட பிரிவு (சுப்பிரமணியம் வித்தியாசாலை) 5 மாணவர்கள்

7. இரத்தினராசா நிமல் (மருதடி) 172 புள்ளிகள்
8. அரிகரன் யசிந்தினி (கொள்ளன்அடைப்பு)165 புள்ளிகள்
9. பாலேந்திரா சிவராஜினி (புதுறோட்) 162 புள்ளிகள்
10. கிருஸ்ணகோபால் கீர்த்திகா (விக்காவில்) 158 புள்ளிகள்
11. ஏகாம்பரம் கோபிநாத் (புதுறோட்) 154 புள்ளிகள்

மெய்கண்டான் வித்தியாசாலை

12. இராஜேந்திரம் ஜனனி (சிவகாமிஅம்மன் கோயிலடி) 156 புள்ளிக

வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை(சடையாளி) - 2

13. கிருபானந்தராஜா சிந்துஜன் (சடையாளி) 161 புள்ளிகள்
14. ஜெகதீஸ்வரன் விதுர்சனா (மாப்பானவூரி) 158 புள்ளிகள்

சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை

15. அமிர்தசிங்கம் பிரணவரூபன் (பொன்னாவளை) 155 புள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபரின் வேண்டுகோள்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் 01.01.2012 இல் கல்லூரி மண்டபத் தில் நடைபெற்றது. 700 பிள்ளைகளிற்கும் மேற்பட்டோர் கல்வி கற்கும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டத்திற்கு மிகவும் குறைந்தளவிலான மக்களே சமூகமளித்திருந்தனர். இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களில் பெருமளவானோர் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் என்பதுடன், தமது பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலையின் நிலமைகளை அறிந்து கொள்ளவும், தேவைகளை பூர்த்தி செய்யவும் கலந்து கொண்டு நடைமுறைப் படுத்த வேண்டியவர்களான பெற்றோர்களும் பழைய மாணவர்களும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளாதது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இன்று வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் மற்றும் அபிமானிகளின் உதவியை மட்டும் நம்பியே பழைய மாணவர் சங்கங்கள் இயங்குவது வேதனையளிக்கும் விடயமாகும்.

காரைநகரில் இயங்கும் பொது அமைப்புக்களிற்கு முதற்கண் காரைநகரில் தற்போது வாழ்ந்து வரும் பொது மக்கள் வழங்கும் அதீத பங்களிப்பினால் மட்டுமே வெளிநாடுகளில் வாழும் முன்னாள் காரைநகர் வாசிகளின் உதவிகளையும் நல்லெண்ணத்தையும் பெறமுடியும். வெறுமனே வெளிநாடுகள் வாழ் காரைநகர் மக்களின் பங்களிப்பினை மட்டும் ஆதாரமாகக் கொண்டு காரைநகரில் செயற்படுத்தப்படும் அபிவிருத்திகளும், செயற்பாடுகளும் முற்றுமுழுதான பலனை கொடுக்கமுடியாது. காறைநகரில் இன்று வாழும் மக்கள் தங்களின் தேவைகளை, அத்தியாவசிய செயற்பாடுகளை பொது அமைப்புக்களின் ஊடாக பெற்றுக் கொள்ள பொது அமைப்புக்களிற்கு உதவிகளை வழங்குவதோடு அவற்றில் அங்கத்தவர்களாகவும் இணைந்து கொள்ள வேண்டும். நிர்வாக அங்கத்தவர்களை மட்டும் கொண்ட பல பொது அமைப்புக்களில் அங்கத்தவர்களாக பொது மக்கள் இணைந்து கொள்வதும் இல்லை, அவற்றில் தங்களது பங்களிப்புகளை வழங்குவதும் இன்றி ஆர்வமற்ற நிலையில் பார்வையாளர்களாகவும் பங்குபற்ற முடியாத நிலையில் இருந்து வருகின்றார்கள். ஆனாலும் நிர்வாக அங்கத்தவர்கள் தங்களது நேரத்தையும் திறமையையும் பயன்படுத்தி பொது சேவை செய்ய வெளிநாடுகளில் உள்ள காரைநகர் அமைப்புக்களையே முற்றிலும் நம்பியிருக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இன்று காரைநகரிற்கு வெளியே வாழ்ந்து வரும் பலரின் முயற்சியினால் மட்டுமே காரைநகரில் உள்ள பொது அமைப்புக்கள் இயங்கி வருவதாகவும், வெளியூர்களில் இருந்து இவ்வாறான பொது அமைப்புக்களை இயக்குவதற்கும், செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் அவர்களால் பலதடவைகள் காரைநகரிற்கு பயணம் செய்யவேண்டிய இருப்பதாகவும் அதன் மூலம் நேரமும், பொருளும் விரயம் ஆகின்றதெனவும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது. காரைநகரை விட்டு வெளியிடங்களில் வசித்து வரும் மக்களிற்கே காரைநகர் பற்றிய அக்கறையும் ஆர்வமும் மிகுதியாக இருக்கின்றது எனவும் தற்போது காரைநகரில் வாழ்ந்து வரும் பெரும்பாலானோர் தாமுண்டு தமது வேலையுண்டு என்று பொதுப்பணிகளில் ஆர்வமற்ற நிலையில் பார்வையாளராகவோ அன்றி பங்காளராகவோ இணைந்து கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் கருத்துக்கள் நிலவி வருகின்றது. அதே போல் காரைநகரில் இன்று வாழ்ந்து வரும் ஒரு சில பொதுப்பணியில் ஆர்வமுள்ளவர்களும், காரைநகர் மக்களின் தேவைகளை பொது அமைப்புக்களின் ஊடாக நிறைவேற்ற முயற்சி செய்து வரும் நல்லுள்ளங்களும் வெளியிடங்களில் வாழ்ந்து கொண்டு காரைநகர் பொது அமைப்புக்களில் தமது ஆதிக்கங்களையும் அதிகாரங்களையும் தமது சுயநல நோக்கிலேயே திணித்து வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டும் நிலவி வருகின்றது.

இந்த நிலையில் 01.01.2012 அன்று நடைபெற்ற கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய பழைய மாணவர் சங்க

தொடர்ச்சி 23ம் பக்கம் பார்க்க...................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரிக்கூடல்
சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

நாற்புறமும் கடலாற் சூழப்பட்டுள்ள காரைநகரில் நெய்தல் நிலத்தின் நடுவே வயலும் வயல் சார்ந்த மருத நிலத்து வடபால் பயிர்கள் கூடலாக இருந்த பிரதேசம் பயிரிக்கூடல் என்று அழைக்கப்பட்டு வந்தது. கார்காத்த வேளாண் பெருமக்கள் வாழும் வரலாற்றுச் சிறப்புமிக்க பயிரிக்கூடல் பதியில் வாழ்ந்து வந்த நம்முன்னோர் பசுக்கள் மீது பற்றும் பாசமும் உடையவர்களாக இருந்துள்ளனர்.

பண்டைக்காலத்தில் பசுக்கள் நீர் அருந்துவதற்கு நல்ல தண்ணீர்க்கிணறு வெட்டி தண்ணீர்த் தொட்டி கட்டி பசுக்கள் தம் தினவைப் போக்க வசதியாக ஆவுரோஞ்சிக்கல்லையும் கட்டி வைத்தனர். இந்த ஆவுரோஞ்சிக்கல் நடைப்பயணத்தினால் களைத்து வருவோரின் சுமைகளைத் தாங்கும் சுமை தாங்கியாகவும் பயன்படுத்தப்பட்டது.

காரைநகரில் பசுக்கள் (கோ) நிறைந்திருக்க (வளம்) பிரதேசம் கோவளம் என்று அழைக்கப்பட்டதாகவும் கோவளத்துப் பசுக்கள் எல்லாம் பயிரிக்கூடல் வழியாக வயல்நிலத்தில் புல் மேயச் செலன்று திரும்புவதாகவும் அப்பசுக்கள் தண்ணீர் குடிப்பதற்கு வசதியாக பயிரிக்கூடலில் ஒரு குளம் கட்டப்பட்ட தாகவும் வரலாறு கூறுகிறது. ஆரம்ப காலத்தில் மருதனாகுளம் என்று அழைக்கப்பட்ட இக்குளம் இன்று மளவராயர் குளம் என மருவி வழங்கப்படுகின்றது. அக்காலத்தில் பசுக்களுக்கு கொடிய நோய் வந்தபோது அந்நோயினின்றும் பசுக்களைக் காக்க வேண்டிய பயிரிக்கூடலில் அம்மன் ஆலயம் ஒன்று அமைக்கப்படபது. இவ்வாலயம் கிழக்குத்திசை நோக்கியிருந்தால் கிழக்கி அம்மன் என்று அழைக்கப்பட்டது.

இவ்வாலாயம் சித்தர்பண்டாரம் என்பவரது காணியில் அமைக்கப்பெற்ற மடாலயமாக விளங்கியது. அக்காலத்தில் சித்தர் பண்டாரம் கோயில் என்று பிற்காலத்தில் அவருடைய பரம்பரையால் வந்த மொட்டையர் என்று அழைக்கப்படும் சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை தம்பதியர் நீண்ட காலமாக பிள்ளைப் பேறு இன்மையால் பிள்ளை வரம் வேண்டி கிழக்கி அம்மன் ஆலயத்தில் முருகப் பெருமானை மூலஸ்தானத்தில் பரதிஸ்டை செய்தார். அன்று முதுல் மொட்டையற்ரை முருகன் கோயில் என்று இவ்வாலயம் வழங்கப்படலாயிற்று.

ஆரம்ப காலத்தில் வேல், சூலம் மரத்தால் செய்யப்பட்ட அம்மன் சிலை என்பன இவ்வாலயத்தில் வைக்கபட்டிருந்தன. கி.பி 1918ல் அமைக்கப்பட்ட இவ்வாலயம் சூளைக் கற்களினால் கட்டப்பட்டிருந்தது. 1928ல் மாவிட்டபுரமும் அப்பாக் குருக்களால் முதலாவது கும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்யப் பெற்றது .இவ்வாலயத்தின் ஆரம்ப கால சிவாச்சாரியர்களான சிவானந்தையர் குமாரசாமி ஐயர் ம்ற்றும் அவரது தமையனார் விசுவநாதையர் சுப்பையா ஆகியோர் அப்பாக்குருக்களுடன் சேர்ந்து கும்பாபிஷேகக் கிரியைகளைச் சிறப்பாகச் செய்தனர். 1928ல் நடைபெற்ற முதலாவது கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அப்பாக்குருக்கள் பரம்பரையைச் சேர்ந்தவர்களே ஆலய நித்திய பூசையினைச் செய்து வந்தனர். 1945ம் ஆண்டு தொடக்கம் குமாரசாமி ஐயர் அமர்தேஸ்வசர்மா அவர்களும் 1996ம் இருந்து குகனேசசர்மா சண்முகநாதக்குருக்களும் பூசைகளைச் செய்து வருகின்றனர்.

இவ்வாலயத்தில் 1928, 1961, 1978, 1996, 2010 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. காரைநகரில் முதன் முதலாக ஒற்றைத் தளத்தில் கோபுரம் அமைக்கப் பெற்ற ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே. 2010ல் இவ்வாலயத்தில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இராஜகோபுரம் மணிக்கோபுரம் மணி மண்டபம், பிள்ளையார், அம்மன் சந்நிதிகள் என்பன அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

வெள்ளிக்கிழமை விரதம் முருகப் பெருமானுக் குரியது. வெள்ளிக்கிழமை விரதத்தின் மகிமை பற்றி அம்பாள் முருகப்பெருமானுக்கு உபதேசம் செய்ததாக புராணக் கதைகளில் கூறப்படுகிறது. காரைநகரில் அம்பாளும் முருகனும் அருளாட்சி செய்வதும் வெள்ளிக்கிழமை விரதம் அனுட்டிப்பதற்கும் உகந்த ஆலயமாக பயிரிக்கூடல் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோவில் விளங்குகிறது.

இவ்வாலய மகோற்சவம் தை மாத பூர்வ பக்க முடிவில் ஆரம்பித்து பூரணை தினத்தன்று சமுத்திரத் தீர்தத்துடன் நிறைவடைகிறது. மகோற்சவம் பத்து நாள் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.
கொடியேறறத் திருவிழாவன்றும் தேர்த்திருவிழா வன்றும் 1008 சங்காபிஷேகம் நடைபெறுவதும் இவ்வாலயத்தின் சிறப்பாகும். தைப்பூசத் தினத்தில் நெல் வயல்களில் புதர் எடுத்து புதுப் பூசை செய்த பின் சுவாமி ஈழத்துச் சிதம்பர புனித தீர்த்தமான சவுக்கடித் தீர்த்த கரைக்குத் தீர்த்தமாடச் செல்வது வழமை. இவ்வாலயத்தில் கந்தசஷ்டி, கார்த்திகைத் திருவிழா, திருவெம்பாவை போன்ற விசேட காலங்களில் சிறப்பான பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகிறது. பங்குனிமாத இறுதியில் விளக்கு வைத்து பொங்கல்மடை பரவும் நிகழ்வு இடம் பெற்று வருகிறது,

இவ்வாலயத்துக்கென தர்மசாதனம் செய்யப்பட்ட நெற்காணிகள் தென்னந்தோட்டம் என்பவற்றில் இருந்து பெறப்படும் வருமானம் ஆலய நித்திய பூசைக்குப் பயன்படுத்தப்படுகிறது. துறைமுகம் கிட்டங்கியில் கடைத்தொகுதி ஒன்றும் அல்லின் வீதியில் காணி ஒன்றும் இவ்வாலயத்துக்கு தர்மசாதனம் செய்யப்பட்டுள்ளன. முற்காலத்தில் மக்கள் தமது ஆதனங்களை ஆலயங்களுக்குத் தர்மசாதனம் செய்யும் மரபு இருந்து வந்துள்ள மைக்கு இவை நல்ல உதாரணங்களாகும். இன்று இவ்வாலயம் மொட்டையர் கணபதிப்பிள்ளையின் பரம்பரையில் வந்தவர்களால் சிறப்பாக பரிபாலிக்கப் பட்டு நித்தியபூசை விசேட திருவிழாக்கள் மற்றும் மகோற்சவத் திருவிழாக்கள் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

06.02.2012 அன்று நடைபெற்ற தேர்த்திருவிழா காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புத்துரை பள்ளிக்கூடம் மீண்டும் 01.01.2012 அன்று மீள ஆரம்பிக்கப்பட்டது

காரைநகர் மீளகுடியேற்றத்தின் பின்னர் 96ம் ஆண்டு மீள திறக்கப்பட்ட இப்பாடசாலை பின்னர் அடுத்த வருடம் மூடப்பட்டது. அதன் பின்னர் மீள திறப்பதற்க பல வருடங்காளக எடுத்த முயற்சிகள் பயனின்றியிருந்தன. ஆனாலும் தொடர்ச்சியாக இப்பாடசாலையினை மீளஆரம்பிப்பதற்கு இப்பகுதி மக்கள் எடுத்த முயற்சிக்கு யாழ் மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் முயற்சி யோடு, வடமாகாண கல்விப் பணிப்பாளர், கோட்ட கல்வி பணிப்பாளர்கள் மற்றும் காரை கிட்ஸ் பார்க் நிர்வாகத்தினர் எடுத்துக்கொண்ட முயற்சியினால் 01.01.2012இல் மீள திறக்கப்பட்டு கற்றல் செயற் பாடுகள் இடம்பெற ஆரம்பித்துள்ளது. அதிபராக திரு.க.நேத்திரானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். அதனைத்தொடர்ந்து 16.01.2012 அன்று முதலாம் வகுப்பிற்கு இணைந்து கொள்ளும் மாணவர்களிற் கான கால்கோல் விழாவும் நடைபெற்றது.

யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை, காரைநகர்(அப்புத்துரை பள்ளிக்கூடம்)

பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்ட அறிக்கை – 02.01.2012

காரைநகர் யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பண கூட்டம் 02.01.2012 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலையின் அதிபர் திரு க.நேத்திரா னந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இரண்டு நிமிட மொனவணக்கத்துடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் தலைவர் உரையாற்றும் போது கடந்த காலங்களில் மிகச் சிறப்பாக இயங்கி பல கல்விமான்களை உருவாக்கிய இப்பாடசாலை நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் இன்று தனது கல்விச் செயற்பாட்டிற்காக மீள ஆரம்பிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இப்பாடசாலையில் கற்பதற்காக இணைந்துள்ள மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன். இப்பாடசாலை கடந்த காலங்களைப் போல மீண்டும் முன்மாதிரிப் பாடசாலையாக மிளிரவும் உங்கள் சிறார்களின் கற்றல் செயற்பாடுகள் உயர்வடைவதற்கும் பெற்றோர்களாகிய நீங்கள் பூரண ஒத்துழைப்பு வழுங்கவேண்டும் அந்தவகையில் பெற்றோர் ஆசிரியர்களை ஒன்றினைத்து பாடசாலை அபிவிருத்திச் சபை ஒன்றினை இன்று உருவாக்கி அதன் ஊடாக பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்காற்று வோம் என்றார்.

தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சபைக்கான நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற்றது சபையின் தலைவராக பதவி வழியாக பாடசாலை அதிபரான திரு க. நேத்திரானந்தன் அவர்களைத் தெரிவு செய்ததுடன் சபையின் செயலாளராக திரு ந.பாரதி அவர்களை திரு பா.ராமகிருஸ்ணன் முன்மொழிய அதனை திருமதி ச.யோகேஸ்வரி அவர்கள் வழிமொழிந்தார். பொருளாளராக பாடசா லை ஆசிரியர் ஒருவரே கடமையாற்ற வேண்டும் என்பதால் ஆசிரியை செல்வி தே.தர்சினி அவர்கள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டதுடன் உப செயலாள ராக திருமதி மோகனாம்பிகை குமாரசேகரம் அவர்களை திருமதி உ.சயந்திவதனா முன்மொழிய திரு ந.பாரதி வழிமொழிந்தார். தொடரந்து நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது. திரு பா.இராமகிருஷ்ணன், திரு ச.சண்முகராசா, திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.யோகேஸ்வரன், திருமதி S.தேவமலர். திருமதி ச.யோகேஸ்வரி, திருமதி உ.சயந்திவதனா, ஆகிய ஏழு பேரையும் உள்ளடக்கி பதினொருபேர் கொண்ட நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

நிர்வாகசபை தெரிவு இடம்பெற்றதைத் தொடர்ந்து சபையினரால் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக விவாதிக்கப்பட்டதுடன் பாடசாலை அபிவிருத்திச் சபைக்கான நடைமுறைக் கணக்கு ஒன்றினை வங்கியில் பேணிவரவேண்டும் என கேட்கப்பட்டது. அதையடுத்த அருகில் உள்ள இலங்கை வங்கி காரைநகர் கிளையில் நடைமுறைக் கணக்கினை ஆரம்பிப்பது எனவும் கணக்கைக் கையாளும் அதிகாரம் பொருளாளருடன் தலைவர் அல்லது செயலாளர் ஒப்பமிட்டு கையாளமுடியுமென தீர்மானம் எடுக்கப்பட்டது. இதனை திரு ச.சண்முகராசா முன்மொழிய திருமதி கு.மோகனாம்பிகை வழிமொழிந்தார் தொடர்ந்த பாடசாலையின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் செயலாளரினால் நன்றி உரை நிகழ்த்தப்பட்டது.

செயலாளர் ந.பாரதி தனது உரையில் பாடசாலையினை மீள ஆரம்பிப்பதற்கு உதவிய அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்காக புனரமைக்கப்பட்டு துப்பரவுசெய்யப்பட்டு, வகுப்பறைக் கட்டடமும் அதிபர் அலுவலகமும் வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்துவதற்காக பெற்றோர்களாகிய நீங்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவிப்பதடன் இந்தப் புனரமைப்புப் பணிக்காக ஏற்பட்ட செலவு இதுவரை ஈடுசெய்யப்படவில்லை எனவும் சுத்திகரிப்பாளர்கள், பொருட்களை வழங்கிய வர்த்தக நிறுவனத்தினர், வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்ட பணியாளர்கள் ஆகியோருக்கான நிதியினை இந்தச் சபை பெற்று வழங்க ஆவனசெய்யவேண்டும் எனக்கேட்டுக் கொண்டதுடன் புனரமைப்புப் பணிக்கேற்பட்ட செலவு விவரத்தினை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பதாக செயலாளரால் மேலும் தெரிவிக்கப்பட்டதுடன் கூட்டத்திற்கு வருகைதந்து பங்களிப்பு வழங்கிய பெற்றோருக்கும், அதிபர்,ஆசிரியர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றியதுடன் கூட்டம் பிற்பகல் 3.35 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்திற்கு புதிய கட்டடத் தொகுதி

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்திற்கு புதிய கட்டடத் தொகுதி ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய ஆரம்பப் பிரிவின் ஆண்டு 05 வகுப்பு கடந்த முப்பது ஆண்டுகாலமாக ஆரம்பப் பிரிவில் நடைபெறாது சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் இயங்குவதுடன் ஆண்டு 1-4 வரையான வகுப்புக்கள் போதிய இடவசதியின்றி ஆலடிப்பாடசாலையில் இயங்கிவருகின்றது.

தற்போது நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடத்தொகுதி பிரார்த்தனை மண்டபம் தனியான வகுப்பறைகள் கணனி மூலை, என்பவற்றை உள்ளடக்கியதுடன் சிறுவர் பூங்கா அமைக்கவும் ஏற்புடையதாக அமையும்.

அரம்பகால பிரார்த்தனை மண்டபத்தில் பாவனைக்கேற்ற கட்டிடப் பொருட்கள், லண்டன் வாழ் கல்லூரி பழைய மாணவன் லண்டன் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய,பாலாவோடை இ.த.க பாடசாலை பழையமாணவர் சங்கத்தினருடைய நிதி உதவியுடனும் லண்டன் காரை நலன்புரிச்சபை காரை அபிவிருத்திச் சபை, பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

ஆரம்பகால பிரார்த்தனை மண்டபம் அகற்றப் படுவதனால் 150 மீற்றர் ஓடுபாதை இடைநிலைத் தரத்திலான உதைபந்தாட்ட மைதான வசதிகள் அமைய உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப கால கட்டடம் அகற்றப்படுகின்ற அதேவேளை சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாலயத்தை ஸ்தாபித்த பெருமக்களின் ஞாபகார்த்தமாக பொருத்தமான கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கும் குடும்ப உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர்.

அமரர் தியாகராசா மகேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியும் ஏனைய கட்டடங்களும் வித்தியாலயத்திற்கு மைதான வசதியை ஏற்படுத்துவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கிழக்குப் பிரதேசத்தில் வினைத்திறன் மிக்க பயன்தரு பாடசாலையாக காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் மிளிர நலன் விரும்பிகள் அனைவரும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டும் என பாடசாலை சமுகம் எதிர்பார்த்து நிற்கின்றது.

தையல் பயிற்சி நிலையத்தினரின் கண்காட்சி

அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் பிறந்த நாளாகிய ஜனவரி 10ம் திகதியன்று மகேஸ்வரன் தர்மசுரபி மண்டபத்தில் அமைந்துள்ள தையல் பயிற்சி நிலையத்தில் கண்காட்சி நடைபெற்றது. காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியினை இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் இ.சிவகுமாரன் நாடாவெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் காரை உதவி அரசாங்க அதிபர் மற்றும் கிராமசேவகர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காரை அபிவிருத்தி சபையினர், அமரர் மகேஸ்வரனின் சகோதரர் தி.விக்கினேஸ்வரன் மற்றும் பல பிரமுகர்களுடன் பாடசாலை மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.திருமதி விஜயகலா மகேஸ்வரனின் முயற்சியினால் கடந்தவாரம் மீண்டும் திறந்து வைக்கப்பட்ட அப்புத்துரை பள்ளிக்கூடம், சுப்பிரமணியம் வித்தியாசாலை, மெய்கண்டான் வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளிற்கு தலா ஒரு கணணியும், காரைநகர் பொது அமைப்புக்களிற்கு தண்ணீர் தாங்கிகளும் வழங்கப்பட்டன. அமரர் தியாகராஜா மகேஸ்வரன் நினைவாக நிறுவப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தில் கல்வி கற்று சித்தியடைந்த மாணவர்களிற்கு சான்றிதழ்களும் நினைவு பரிசில்களும் வழங்கப்பட்டதுடன், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள 5 பேர்களிற்கு புதிய தையல் மெசின்களும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் 29.01.2012 அன்று நடைபெற்றது . . .

29.01.2012 அன்று எதிர்பார்த்ததைவிட அதிக மக்கள் கலந்து கொள்ள மேற்படி கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்தில் தலைவர் உரை, செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை, பொருளாளர் அறிக்கை என்பன வாசிக்கப்பட்டன. தலைவர் தனது உரையில் காரைநகரில் உருவாக்கம் பெற்றுவரும் காரைநகர் அபிவிருத்திசபை நூலகத்திற்கு பிரான்ஸ் வாழ் காரை மக்கள் வழங்கும் நிதி நேரடியாக அவர்கள் விருப்பத்தின் பெயரில் பெற்று வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். உலகெங்கும் வாழும் காரை மக்களினால் காரைநகரில் முன்னெடுக்கப்படும் நூலகத்திற்கான பங்களிப்பை வழங்கி வரும்வேளை பிரான்ஸ் காரை மக்களையும் அப்பணியில் இணைத்துக்கொள்ளவும் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் முன்வந்துள்ளதாகவும் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் 3வது ஆண்டு விழாவிற்கான ஏற்பாடுகள் பற்றி அறிவிக்கப்பட்டது. 06.05.2012 அன்று பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் 3வது ஆண்டு விழா நடைபெறவுள்ளதாகவும், அதனையொட்டி காரைநகர் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் அதிஸ்டலாப சீட்டிழுப்பு ஒன்றினையும் அறிமுகம் செய்தது. அதிஸ்டாப சீட்டு ஒன்றின் விலை 3 யூரோக்களிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ்வருடம் நடைபெறவுள்ள ஆண்டு விழாவில் சிறுவர்களின் நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது பெரியவர்களின் நிகழ்ச்சி ஒன்றும் நடாத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரான்ஸ் காரை மக்களின் சிறார்களின் ஆக்கங்களை தொகுத்து மலர் ஒன்றினை வெளியிடப்படவுள்ள தாகவும் அறிவிக்கப்பட்டது.

06.05. 2012 அன்று நடைபெறவுள்ள விழாவிற்கு ஏற்பாட்டாளர்களாக நிர்வாக சபையில் அங்கம் வகிக்காத நால்வர் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு: திருமதி நடராஜா புஸ்பமலர் திருமதி சுகிர்தராசா சாந்தி திருமதி அருள்நாதன் நேசமலர் திரு.கணேசு மயில்வாகனம் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டவர் ஒருவரினால் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் பெயரினை பிரான்ஸ் காரை மக்கள் மன்றம் என பெயர் மாற்றம் செய்யப்படவேண்டும் என்றும், அங்கத்தவர் தெரிவு நடைபெறும் பொதுக்கூட்டங்களில் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளிற்கு ஒன்றிற்கு மேற்பட்டோர் தெரிவாகும் பட்சத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படவேண்டும் என்றும், தனிப்பட்ட ஓரிருவரின் விருப்பு வெறுப்புக் களிற்கு உடன்பட்டு சிலர் புறக்கணிக்கப்டுவதும், விவாதங்கள் நடாத்துவதும் இதன் மூலம் தவிர்க்கப்படும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பொருளாளர் அறிக்கையில் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம் காரைநகரில் முன்னெடுத்து வரும் ஆரம்ப பாடசாலை உதவிகள் பற்றிய விபரங்கள் தெரியப்படுத்தப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் கடந்த பொதுக்கூட்டத்திற்கு கலந்து கொண்ட பிரான்ஸ் வாழ் காரை மக்களின் குறிப்பிடத்தக்களவு இருந்துள்ளதாகவும், அதன் காரணமாக விவாதங்கள் அற்ற வகையிலும் உத்தியோக பூர்வமாக பயனள்ள விடயங்களைப் பற்றி ஆராய்ந்து மண்ணிற்கும் மக்களிற்கும் பணி செய்ய பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம் முன்வந்து ள்ளதாகவும் கூட்டம் இனிதே நிறைவு பெற்றதாகவும் அறியப்படுகின்றது.

படம் சொல்லும் செய்தி

வியாவிலில் அமைந்துள்ள கணபதீஸ்வரக்குருக்கள் ஞாபகர்த்த நூலகத்தில் காரைநகர் கடற்படையைச் சேர்ந்தவர் ‘எனது ஊர் காரைநகர்’ இணையத்தளத்தினை பார்வையிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியை

செல்வி வைரமுத்து அஞ்சனாதேவி BSC.Dip.Edu

மறைவு

காரைநகர் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வைரமுத்து அஞ்சனாதேவி அவர்கள் வைரமுத்து இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், ரட்டாய்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), விநாசித்தம்பி(ஓய்வுபெற்ற ஆசிரியர்), தெய்வானை, குமாரவேல்(தபாலதிபர், காரைநகர்) ஆகியோரின் சகோதரியும் ஆவார். காரைநகர் இந்துக் கல்லூரியில் பலகாலம் ஆசிரியராக கடமையாற்றி பலரது நன்மதிப்பையும் பெற்ற சிறந்த ஆசிரியையாவார். 08.12.2011 அன்று சுகயீனம் காரமாக இயற்கையெய்தினார்.

பிறப்பு இறப்பு பதிவாளர் கார்த்திகேசு சோமசுந்தரம் மறைவு

காரைநகர் பிரதேசத்தில் கடந்த பல தசாப்தங்களாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவுகளை மேற்கொண்டு வந்தவரும், மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பொறுப்புரிமையாளர் சபையில் கடந்த 13 வருடங்களாக தலைவராகவும் கடமையாற்றிய கார்த்திகேசு சோமசுந்தரம் அவர்கள் 10.11.2011 அன்று காலமானார்.

அன்னாரின் மறைவு காரைநகர் மக்களிற்கு பெரும் இழப்பாகும். தனது பணியினை கடமைக்காக செய்யாது மக்கள் மீது கருணையுடனும், வறிய மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களிற்கான உதவிகளை பெற்றுக்கொடுக்கவும் அறிவுரைகள் வழங்கவும் அன்பாக அனைவருடனும் பேசும் அன்னாரது இழப்பு பெரும் இழப்பாகும்.

காரைநகர் இலங்கை வங்கி ஊடாக தனியார் ஒருவருக்கு ஒப்பந்த அடிப்படையில் சிறுதொழில் ஊக்குவிப்புக்காக உதவி வளங்கப்பட்டது

மடத்துக்கரை அம்மன் கோயில் திருப்பணி

வலந்தலை சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள மடத்துக்கரை அம்மன் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. அந்த வகையில் திருப்பணி வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றது. திருப்பணி வேலைகளை தனித்தனியாக பலரும் பொறுப்பேற்றுக்கொண்டு அவற்றை நிறைவேற்றி வருகின்றனர். தனிப்பட்ட ஒரு சிலரின் முயற்சியினாலும் கு.சண்முகராஜ குருக்களின் வழிநடத்தலினாலும் நடைபெற்று வரும் திருப்பணிகளிற்கு தனிப்பட்ட ஒரு சிலர் கொடுக்கும் நன்கொடைகளினாலும் இப்பணி நிறைவேற்றப்பட்டு வருகின்றது. வழித்துணை அம்மன் என அனைத்து காரைநகர் மக்களும் கடந்து செல்கின்ற அம்மனின் துணை வேண்டி அனைவரும் இத்திருப்பணியில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதடி இந்து இளைஞர் மன்றத்திற்கு கட்டிடம் அமைக்கப்படவுள்ளது

மருதடி பிள்ளையார் ஆலயத்துடன் சேர்ந்து இயங்கும் மருதடி இந்து இளைஞர் மன்றத்தினரால் மருதடி பிள்ளையார் ஆலயத்தின் முன்னால் உள்ள காணி பெறப்பட்டு இம்மன்றத்திற்காக கட்டிடமும் அன்ன தான மண்டபமும் இணைந்ததாக கட்டிடம் கட்டப் படவுள்ளது. 16.12.2011 அன்று அத்திவாரம் இடப்பட்டுள்ளது. மருதடி இந்து இளைஞர் மன்றத்தினரால் ஆரம்ப பாடசாலை ஒன்றும் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கடந்த காலங்களில் மருதடி இந்து இளைஞர் மன்றத் தினரால் அமைதியான முறையில் பல பொதுப்பணி கள் செய்யப்பட்டு வந்துள்ளன. டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு, கிழக்கு மாகாணத்தில் வெள்ளத் தினால் இடம்பெயர்ந்த மக்களிற்கான உதவி, ஈழத்து சிதம்பரத்தில் திருவிழா காலங்களில் தண்ணீர் பந்தல் அமைத்தல் மற்றும் சமுதாக முன்னேற்றத்தை அடிப்படையாக கொண்ட பல விரிவான சேவை களையும் இந்த மன்றத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் டி.எம் ஜெயரட்ணா காரைநகர் வருகை

இலங்கையின் தற்போதைய பிரதம மந்திரி அவர்கள் ஈழத்து சிதம்பரம் தேவஸ்தானத்தினரால் அறிமுகப் படுத்தப்படுகின்ற கோகுலம், பிருந்தாவனம்திட்டங்களை ஆரம்பித்து வைக்க விஜயகலா மகேஸ்வரனின் அழைப்பின் பெயரில் காரைநகரிற்கு 03.02.2012 அன்று வருகை தந்தார். ஈழத்து சிதம்பரம்

தேவஸ்தானத்தினரால் சிவன் கோயிலை சுற்றவுள்ள பகுதியில் கோகுலம் எனப்படும் மாட்டுப்பண்ணையி னையும், பிருந்தாவனம் எனப் படும் தென்னை பயிரை பிரதானமாகக் கொண்ட தோட்டம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. சிவன் கோயிலுக்கு அண்மையில் உலங்கு வானூர்தி மூலம் வந்திறங்கிய பிரதமர் ஈழத்து சிதம்பரத்தில் நடைபெற்ற விசேட பூசையில் கலந்து கொண்டதுடன் பின்னர் அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் குலதெய்வமான மணற்காடு முத்துமாரியம்மன் கோயிலுக்கும் விஜயம் செய்து பூசை, வழிபாடுகளில் கலந்து கொண்டார். பின்னர் தியாகராஜா மகேஸ் வரனின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள தர்மசுரபி மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்திலும் கலந்து கொண்டார். பிரதமர் அவர்களுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார்.

21ம் பக்க.......தொடர்ச்சி

உரிமையாளர் திரு.க.அருள்நேசன், சீமாட்டி ரெக்ஸ் உரிமையாளர் திரு.த.சற்குணராசா, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திரு.எஸ்.மணி வண்ணன், பிரதேச சபை தலைவர் திரு.வே. ஆனைமுகன், காரை கல்விக்கோட்ட அதிகாரி திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவன்காடு கலாமன்றத்தின் கட்டிடம் புனரமைக்கப்பட்டது



பேணவும் 2002ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிழவன்காடு கலாமன்றம் வளர்ச்சியடைந்து கலை பரப்பி வருகின்றது. இதன் முன்னேற்றம் கருதி



கல்வியாளர்கள், ஆர்வலர்கள் உதவிகள் புரிந்து வருகின்றார்கள். இம்மன்றத்திற்காக நிரந்தரமாக ஒரு இடத்தினைப்பெற்று அதனை புனரமைத்து கொடுத்துள்ளார் திரு.சண்முகம் சிவஞானம் அவர்கள். தனது தந்தையார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சண்முகம், தாயார் சண்முகம் மனோன்மணி, பேத்தியார் அம்பலவாணர் இராசம்மா ஆகியோரின் ஞாபகர்த்தமாக புதுறோட்டு சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள வீட்டுடன் அமைந்த காணியினைப் பெற்று, அதனை புனரமைத்து நீர்த்தாங்கி, மலசலகூடம் என்பவற்றையும் புனரமைத்தும் மற்றும் முகப்பு அலங்காரம் என்பவற்றை கலாச்சாரம் பேணும் வகையில் வடிவமைப்பும் செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்று 07.02.2012 அன்று திறப்பு விழா நடைபெற்றது. பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி தீர்த்தேற்சவமான அன்று முருகப்பெருமான் தீர்த்தமாட கசூரினா தீர்த்தக்கடலுக்கு செல்லும் வழியில் போது புதுறோட்டு வீதிவழியாக கிழவன்காடு கலாமன்றத்தின் முன்னர் எழுந்தருளிய தருணத்தில் திறப்புவிழா நடைபெற்றது. திறப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலாநிதி வே.தர்மரட்ணம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரட்ணம், இந்து கலாச்சார திணைக்கள உத்தியோகத்தர் ச.உதயபாலன் மற்றும் சண்முகம் சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ள கோலாகலாமாக திறப்புவிழா நடைபெற்றது.

சர்வதேச சிறுவர், முதியோர் எழுத்தறிவு தினம்

கடந்த ஒக்டோபர் மாதம் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மேற்படி தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அப்போதைய உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதியோர்கள் கௌரவிப்பும், சிறார்கள் கௌரவிப்பும் பரிசளிப்பும் இடம்பெற்றது. காரைநகர் களபூமியைச் சேர்ந்த நூறு வயதை கடந்த பாட்டி தங்கம்மா இளையதம்பி அவர்களிற்கு சிறப்பு கௌரவமும் வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் ஸ்ரீகணேசன் ஸ்ரோர்ஸ் .....(தொர்ச்சி 20ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ற்ரன் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

28.01.2012 அன்று நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் வடமாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் ஜோன்ஸ் குயின்ரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அத்துடன் முன்னாள் அதிபர் ந.பரமசிவம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்.







முழுமையான படங்களை www.karainews.com
என்ற இணையத்தளத்தில் பாருங்கள்

ஜனவரி 26, 2012 யாழ்ற்ரன் கல்லூரி கனிஷ்ட வித்தியாலயமான கோவிந்தர் பள்ளிக்கூடத்தின் விளையாட்டு போட்டி, யாழ்ற்ரன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் உதவி அரசாங்க அதிபராக திருமதி பாபு தேவநந்தினி

04.01.2012 முதல் காரைநகர் காரைநகர் உதவி அரசாங்க அதிபராக திருமதி பாபு தேவநந்தினி அவர்கள் பதவியேற்றுக் கொண்டார். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கடந்த வருட இறுதியில் பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் களை இடமாற்றம் செய்து அறிவிப்பினை வெளியிட்டிருந்தது. அதற்கமைய கடந்த 6 வருடங்களிற்க மேலாக காரைநகர் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு.ஆர்.ரி. ஜெயசீலன் பருத்தித்துறை பிரதேச செயலாளராகவும், சங்கானை பிரதேச செயலாளராக கடமையாற்றிய வரும், சுழிபுரத்தை சேந்தவருமான திருமதி பாபு தேவநந்தினி அவர்கள் காரைநகர் உதவி அரசாங்க அதிபராகவும், நல்லூர் பிரதேச சபை செயளாளராக கடமையாற்றிய காரைநகரைச் சேர்ந்த திரு.அம்பலவாணர் சோதிநாதன் சங்கானை பிரதேச சபை செயலாளராகவும் இடமாற்றம் பெற்றார்கள்.

காரைநகர் பிரதேசத்திற்கு உதவி அரசாங்க அதிபராக பதவியேற்றிருக்கும் திருமதி பாபு தேவநந்தினி அவர்களை 'எனது ஊர் காரைநகர்" சார்பில் காரை மண்ணிற்கும் மக்களிற்கும் சிறந்த முறையில் சேவையாற்றவும், காரை மண்ணினதும் மக்களினதும் தேவைகளையும், அறிந்து சேவையாற்றுவதுடன் இடம்பெயர்ந்து வாழும் காரைநகர் மக்களிற்கு காரைநகர் செய்திகளை வழங்க 'எனது ஊர் காரைநகர் " மூலமாக முன்வந்து தருமாறும் கேட்டுக்கொண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சேவை நலன் பாராட்டு

கடந்த ஆறு வருடங்களிற்கு மேலாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உதவி அரசாங்க அதிபராக பணிபுரிந்து காரைநகர் மக்களின் மனங்களிலும் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்ட திரு.இ.த. ஜெயசீலன் அவர்களிற்கு பணிமனை ஊழியர்கள் பிரியாவிடை அளித்தார்கள். பிரியாவிடையின் போது பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜகலா மகேஸ்வரன் அவர்களி னால் ஞாபகர்த்த கேடயம் ஒன்று காரைநகர் நிலப்பரப்பை வடிவமாகக் கொண்டு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

..................12ம் பக்க தொடர்ச்சி

பொதுக்கூட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து 15க்கும் மேற்பட்டவர்களும், வெளியூர்களில் இருந்து 15க்கும் மேற்பட்டவர்களும், காரைநகரில் இருந்து 10 பேர் வரையானோரும் கலந்து கொண்டிருந்தனர். கடந்த 7 வருடங்களாக வெளிவராது இருந்த பழைய மாணவர் சங்க வரவு செலவு அறிக்கை வெளியிடப்பட்டது. கலாநிதி ஆ.தியாகராசா அவர்களின் மகள் கலந்து கொண்டு இப்பாடசாலையின் பெயரினை மீண்டும் காரைநகர் இந்துக் கல்லூரி என்று மாற்றுமாறும் தனது தந்தையார் கலாநிதி ஆ.தியாகராசா தன்னலமற்றவகையில் பொதுச்சேவை செய்தார் என்றும், தனது பெயரினை இப்பாடசாலைக்கு சூட்டவேண்டும் என்று ஒருபோதும் விரும்பியிருக்க மாட்டார் என்றும், அவரது ஆத்மாகூட இன்று விரும்பாது எனவும் மீண்டும் இப்பாடசாலையின் பெயரினை காரைநகர் இந்துக் கல்லூரி என மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் அன்பாக கேட்டுக்கொண்டார்.

வெளியிடப்பட்ட முற்று முழுதான வரவு செலவு அறிக்கை, தலைவர், செயலாளர் அறிக்கை என்பனவற்றை பார்வையிட www.karainews.com என்ற முகவரியில் பார்வையிடலாம். அதிபர் அவர்களின் தலைவர் அறிக்கையில் கீழ் வரும் வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன.

1. மைதான பார்வையாளர் அரங்கு
2. நடராசா மண்டபம் புனர்நிர்மாணம்
3. சயம்பு மண்டபம் திருத்தம்
4. மாதாந்தம் மின், தொலைபேசி கட்டணங்கள்
5. ஓட்டோ பராமரிப்பு
6. வலய, மாவட்ட மட்ட போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கான அனுசரணை
7. ICT, சித்திரம், சமயம், விஞ்ஞானம் (ஆங்கிலம்), அரசியல் விஞ்ஞானம், விவசாய பாட ஆசிரியர்கள்
8. நூல் நிலைய பராமரிப்பும், உதவியாளர் வேதனமம்
9. தினசரி பத்திரிகைகள்
10. கணனிக்கூட உதவியாளர் வேதனம்
11. எல்லைப்புற வேலி புனரமைப்பு
12. கணனித் திருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகராசா ம.ம.வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி 11.02.2012 அன்று மிகவும் கோலாகலாமாக நடைபெற்றது

பிரதம விருந்தினராக இலங்கை வங்கி யாழ் கிளை பதில் முகாமையாளர் P.சிவபாதம் மற்றும் அவர் துணைவியார் கலந்து கொண்டனர் சிறப்பு விருந்தினராக சீமாட்டி ரெக்ஸ் உரிமையாளர் த.சற்குணராசா அவர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் காரைநகர் கடற்படை பொது சன தொடர்பு அதிகாரி, பிரதேச சபை தலைவர் வே.ஆனைமுகன், பிரதேச சபை உறுப்பினர் வீ.கண்ணன், முன்னாள் ஆசிரியர் திரு.சோமாஸ்கந்தன், கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரட்ணம் மற்றும் பலரும் கலந்து சிறப்பித்தனர்.





மேலதிக படங்கள் மற்றும் விபரங்கள் www.karainews.com

வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை(சடையாளி) வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி Feb 12, 2012 அன்று நடைபெற்றது

பாடசாலை அதிபர் செல்வி வி.விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக காரை கோட்டக்கல்வி அதிகாரி திரு.பு.ஶ்ரீவிக்கினேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார். அத்துடன் ஆசிரிய ஆலோசகர் திரு. கேசவன், யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திரு.வே.முருகமூர்த்தி, கிராமசேவகர் திரு.இ.திருப்புகழூர்சிங்கம், ஈழத்து சிதம்பர பிரதான குரு சிவஶ்ரீ ஈஸ்வரக்குருக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பெப்ரவரி 18, 2012

பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை இலங்கை வங்கி கிளை முகாமையாளர் திரு. திருமதி கு.சிவஞானசுந்தரம் அவர்களும், சிறப்பு விருந்தினர் களாக தீவக வலய உதவி கல்விப்பணிப்பாளர் திரு.ச.பாஸ்கரன், காரை கோட்டக்கல்வி அதிகாரி திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக பயிரிக்கூடல் சிவசுப்பிரமணியசுவாமி கோயில் பிரதமகுரு கு.சண்முகராஜக் குருக்கள் அவர்களும் கலந்து கொண்டனர்.



காரைநகர் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டுப் போட்டி

காரைநகரில் பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி பெப்ரவரி 18. 2012 அன்று உதவி அரசாங்க அதிபர் திருமதி பாபு தேவநந்தினி தலைமையில் இடம் பெற்றது. வியாவில் சைவ வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டிகளில் பாரம் பரிய விளையாட்டுக்கள் சில இடம்பெற்றதுடன் குறிப்பிடத்தக்களவு மக்கள் பார்வையாளர்களாகவும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டு பெப்ரவரி 17, 2012

பிரதம விருந்தினராக திரு.க.அருணகிரிநாதன் (உதவி கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி கல்வி

திணைக்களம் தீவக கல்வி வலயம்)மற்றும் சிறப்பு விருந்தினராக திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் (கோட்டகல்வி அதிகாரி காரைநகர்) அவர்களும் திரு.சிவகுமாரன் (முகாமையாளர் இலங்கைவங்கி காரைநகர்) திரு.அ.கெங்காதரன் (முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி காரைநகர் மற்றும் செல்வி.சிதம்பரப்பிள்ளைதிருமகள்(கிராமசேவையாளர்) திரு.ஆர்.தயாபரன்(சுகாதார பரிசோதகர் அவர்களும் கௌரவ விருந்தினராக வியாவில் ஐயனார் ஆலய பிரதமகுரு அவர்களும் கலந்து சிறப்பித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் புதிய அதிபராக கணித ஆசான் திரு வேலுப்பிள்ளை முருகமூர்த்தி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் புதிய அதிபராக திரு வேலுப்பிள்ளை முருகமூர்த்தி அவர்கள் செப்டெம்பர் 07, 2011 முதல் நியமிக்கப்பட்டுள்ளார். காரைநகர் சடையாளியைச் சேர்ந்த இவர் ஆரம்பக் கல்வியை வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலையிலும்(சடையாளிப் பள்ளிக்கூடம்) இடைநிலைக் கல்வி மற்றும் உயர்தரக் கல்வியை யாழ் இந்துக்கல்லூரியிலும் பயின்றதுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானிப் பட்டத்தினையும் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

1978 இல் ஆசிரிய சேவையில் இணைந்த கொண்ட இவர் முதன் முதலாக கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை ஆரம்பித்து தொடர்ந்து பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கணித்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றதுடன் தேசிய கல்வி நிறுவகத்தில் பாடசாலைகள் முகாமைத்துவ டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 1984 தொடக்கம் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை மேற்கொண்டு 1993ம் ஆண்டுவரை இப்பாடசாலையில் கணிதபாடத்தினை மிக எளிமையான முறையில் கற்பித்து நூற்றுக்கணக்கான சிறந்த மாணவர்களை உருவாக்கினார். இவரிடம் கல்விகற்ற பலர் பொறியியலாளர்களாகவும் உயர் அதிகாரிகளாகவும் விளங்குகின்றனர். பெருமளவு மாணவர்கள் கணிதத்துறையினை விரும்பிக் கற்பதற்கு இவருடைய கற்பித்தல் முறை அமைந்திருந்தது. இக்காலப் பகுதியில் பாடசாலை அபிவிருத்திச் சபையின் பொருளாளராகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டார். 1993 தொடக்கம் 1995 காலப் பகுதியில் வடடுக்கோட்டையில் இயங்கிய யாழ்ற்றன் கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றி இடப்பெயர்வு வேளையிலும் காரைமாணவர்களின் கல்விக்கு வழிகாட்டினார்.

1996 தொடக்கம் 2004வரை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய கனிஸ்ட பிரிவு அதிபராகக் கடமையாற்றியதுடன் 2004ம் ஆண்டு முதல் கொழும்பு புனித அந்தோனியார் ஆங்கில மகா வித்தியாலய பிரதி அதிபராகக் கடமையாற்றினார். அதிபர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த இவர் 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் யாழ்ற்றன் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது தந்தையார் சண்முகம் வேலுப்பிள்ளை அவர்கள் 1953 தொடக்கம் 1963 வரை யாழ்ற்றன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி பாடசாலையின் உயர்வுக்கு உழைத்தார் அவரது வழியில் அதிபர் வே.முருகமூர்த்தி அவர்களும் சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியி ஈடுபட்டுவருகின்றார்.

காரைநகர் இந்துக் கல்லுரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையின் பொருளாளராக மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் பொருளாளராகக் கடமையாற்றிய இவர் வாரிவளவு நல்லியக்கச் சபை வருடம் தோறும் நடாத்திய க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பொறுப்பாளராகவும் கடமையாற்றினார் . இவ்வாறு காரைமண்ணின் வளர்ச்சியில் இவரது பங்கு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றது. தற்போது பாடசாலையின் அடைவு மட்டத்தை உயர்த்தவும் சர்வதேச கல்வி உலகுடன் எமது மாணவர்கள் இணைந்து செல்லக்கூடிய வகையில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியம் வித்தியாசாலை மீண்டும் தனித்துவம் பெற்றுள்ளது

காரைநகர் இந்துக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையாக விளங்கிவந்த சுப்பிரமணியம் வித்தியாசாலை அந்த கட்டமைப்பில் இருந்து விலகி தனித்து தனியான ஆரம்ப பாடசாலையாக செயற்பட கல்விச்சபை கடந்த வருடம் தீர்மானித்தது. சுப்பிரமணியம் வித்தியாசாலை 05.01.2012 வியாழக்கிழமை முதல் தனியான பாடசாலையாக இயங்க உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கின்றது. இப்பாடசாலைக்கு புதிய அதிபராக வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலையில்(சடையாளி பள்ளிக்கூடம்) அதிபராக கடமையாற்றிய திருமதி கௌ. அருள்மொழி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

www.karainews.com

மத்தியஸ்தர் சபை காரைநகரில் அங்குரார்ப்பணம்

காரைநகரில் மத்தியஸ்தர் சபை ஆரம்பிக்கப்டுவதற்கு கடந்த வருடம் முதல் பயிற்சிகள் வழங்கப்பட்டு தேர்வுகள் நடாத்தப்பட்டு வந்தன. அதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்தர் சபை 23.01.2012 முதல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. சிறு பிரச்சனைகள், சண்டை, சச்சரவுகளிற்காக பொலிஸ் நிலையம் செல்வதற்கு முன்னர் மஸ்தியஸ்தர் சபையினை அணுகி தீர்வுகளை காணவும், பொது அலுவல்களிற்கான அறிவுரை மற்றும் விபரங்களை மத்தியஸ்தர் சபையினரை அணுகி பெற்றுக்கொள்ளவும் இலங்கை முழுவதிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

காரைநகர் மஸ்தியஸ்தர் சபைக்கு 17 பேர்கள் தெரிவு செய்யப்பட்டு, மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் வடக்குக் கிழக்கு இணைப்பாளர் எஸ்.சனாதனசர்மா முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார்கள்.

மத்தியஸ்தர் சபையின் தலைவராக திரு.க.கலைச்செல்வன்(நடுத்தெரு), உபதலைவர் திருமதி.ச.ஜெகதீஸ்வரி(அல்லின் வீதி) அவர்களும் மற்றும் காரைநகரின் ஒவ்வொரு பகுதிகளைச் சேர்ந்த மற்றும் 15 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011ம் ஆண்டு திருவெம்பாவை உற்சவம்

ஈழத்து சிதம்பரத்தில் நடைபெற்ற 10 நாள் திருவெம்பாவை உற்சவத்தில் கடந்த வருடம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் கலந்து கொண்டனர். "எனது ஊர் காரைநகர்" இணையத் தளம் ஊடாக திருவிழா காட்சிகளை உடனுக்குடன் எடுத்து வந்ததில் தினமும் 5000க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டிருந்தனர். அத்துடன் இணையத்தளம் ஊடாக திருவிழா காட்சிகளை பார்வையிட்டு பரவச மடைந்த சிலர் வெளிநாடுகளில் இருந்து முன்னேற் பாடுகள் எதுவுமின்றி அவசரமவசரமாக தேர்த் திருவிழாவிற்கும் மற்றைய இறுதி நாட்கள் திருவிழாவிற்கும் சென்றுள்ளனர். Mobitel ரெலிக் கொம் நிறுவனத்தினரர் எம்மை தொடர்பு கொண்டு நேரடியாக தேர்த்திருவிழா நிகழ்ச்சிகளை வீடியோ வில் கொண்டு வர முயற்சித்தனர். காரைநகரில் அப்போதிருந்த இன்ரநெற் வசதி கைகொடுக்காத நிலையில் அம்முயற்சி பலனளிக்கவில்லை. காத்தி ருந்த இணையத்தள வாசகர்கள் ஏமாற்றமடைந்த துடன் நேரடியாக எம்மை தொடர்பு கொண்டு தமது விசனங்களை தெரிவித்தனர். எமது முயற்சி பலனளிக்காது ஏமாற்றமடைந்த வாசகர்களிடம் நாம் மனப்பூர்வமான மன்னிப்பை இதன் மூலம் கேட்டுக்கொள்கின்றோம். திருவிழா காலங்களில் மட்டுமல்லாது ஈழத்து சிதம்பரத்தில் தினமும் நித்திய பூசை சிறப்பாக நடைபெற நித்திய பூசை அங்கத்தவராக இணைந்து கொள்ளுங்கள். நித்திய பூசையில் அங்கத்தவராக இணைந்து கொள்ள "எனது ஊர் காரைநகர்" இணையத்தளத்தில் "ஈழத்து சிதம்பரம்" பகுதியில் விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

57வது ஆண்டில் மணிவாசகர் விழா

திருவெம்பாவை உற்சவ காலங்களில் மணிவாசகர் சபை நடாத்தும் மணிவாசகர் விழா 57வது ஆண்டாக 2011ம் ஆண்டு திருவெம்பாவை காலத்திலும் நடாத்தப்பட்டது. அதனையொட்டி மணிவாசகர் சபையினரால் காரைநகர் மாணவர்களிற்கிடையே சைவ சமய பரீட்சையும் நடாத்தப்பட்டது. வழமை போல் 1500க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பரீட்சை எழுதினர். ஒவ்வொரு பிரிவிலும் அதிகூடிய புள்ளிகளை பெற்ற மாணவர்களிற்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படுவது மாணவர் களிடையே சைவ சமய பாடத்தை ஆர்வமுடன் கற்பதற்கு காலம் காலமாக உந்து சக்தியாக விளங்கி வருகின்றது. அதனை தொடர்ந்தும் நடாத்துவதற்கு "எனது ஊர் காறைநரகர்" சார்பில் தீசன் திரவியநாதனினால் கடந்த 4 வருடங்களாக திரவியநாதன் ஞானாம்பிகை ஞாபகர்த்தமாக தங்கப்பதக்கங்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த வருடமும் 5 தங்கப்பதக்கங்கள் "எனது ஊர் காரைநகர்" சார்பில் வழங்கப்பட்டது.

கடந்த வருடம் நடைபெற்ற மணிவாசகர் விழாவிற்கு வழமைபோல் சமய பெரியார்கள், கல்விமான்கள், சமுதாக முன்னேற்றவாதிகள் என பலரும் அழைக்கப் பட்டு சமய சொற்பொழிவுகளும், பிரசங்கங்களும் நடாத்தப்பட்டன. பரிசில் பெற்ற மாணவர்களிற்கு பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜகலா மகேஸ்வரன் பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி வெளியீட்டு அனுசரணை

graphicland

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org